கலைவாணர் அரங்கில் மலர் கண்காட்சி

இன்று முதல் தொடக்கம்



சென்னை கலைவாணர் அரங்கத்தில் வெள்ளிக்கிழமை தொடங்கவுள்ள மலர்கண்காட்சிக்காக மலை மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட மலர்களால் உருவாக்கப்பட்டு வரும் கலைநயமிக்க குருவி, இருக்கை, கோப்பை உள்ளிட்டவை.

சென்னை, ஜூன் 2: உதகை, கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசங்களில் நடத்தப்படும் மலர் கண்காட்சி சென்னையிலும் நடத்தப்பட உள்ளது.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த தினத்தை ஒட்டி, சென்னை சேப்பாக்கத்தில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் மலர் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தோட்டக்கலைத் துறை சார்பில் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இதற்காக ஏராளமான வண்ண, வண்ண மலர்கள் கலைவாணர் அரங்கத்துக்கு கொண்டு வரப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. மலர்களால் வடிவமைக்கப்பட்ட மயில், குதிரை, சிங்கம், கரடி போன்ற சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன. இந்த மலர் கண்காட்சி வெள்ளிக்கிழமை (ஜூன் 3) முதல் ஜூன் 5-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. பொதுமக்கள் காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை பார்வையிடலாம். நுழைவுக் கட்டணமாக சிறுவர்களுக்கு ரூ.20, பெரியவர்களுக்கு ரூ.50 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்த தினம்: அரசு சார்பில் விழா

சென்னை, ஜூன் 2: முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த தினத்தை ஒட்டி, அரசு சார்பில் வெள்ளிக்கிழமை (ஜூன் 3) விழா நடைபெறவுள்ளது.

சென்னை ஓமந்தூரார் வளாகத்தில் அண்மையில் திறக்கப்பட்ட முன்னாள் முதல்வர் கருணாநிதியின் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள உருவப் படத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்.

மேலும், சென்னை கடற்கரை சாலையில் உள்ள கருணாநிதியின் நினைவிடம், அவர் வாழ்ந்த கோபாலபுரம் இல்லம் உள்ளிட்ட இடங்களுக்கும் முதல்வர் மற்றும் அமைச்சர்கள் சென்று மரியாதை செலுத்துகின்றனர்.

விருதுகள் வழங்குதல்: முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த தினத்தை ஒட்டி, இரண்டு புதிய விருதுகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டன. கலைஞர் எழுதுகோல் விருது, கலைஞர் கலைத் துறை வித்தகர் விருது ஆகிய விருதுகளுக்கு விருதாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சியின் போது விருதுகளை வழங்கவுள்ளார்.

மேலும், அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிற நிகழ்ச்சிகளிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொள்கிறார். முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த தினம் அரசு விழாவாக அறிவிக்கப்பட்டு முதல் முறையாக கொண்டாடப்பட உள்ளது. இதனால், செய்தித் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் சீரிய முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இருவருக்கு கலைஞர் எழுதுகோல்-கலைவித்தகர் விருது

முதல்வர் இன்று வழங்குகிறார்

சென்னை, ஜூன் 2: முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த நாளை ஒட்டி வழங்கப்பட உள்ள கலைஞர் எழுதுகோல் விருது, கலைவித்தகர் விருதுகளுக்கான விருதாளர்கள் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி, கலைஞர் எழுதுகோல் விருதுக்கு மூத்த பத்திரிகையாளர் ஐ.சண்முகநாதனும், கலைவித்தகர் விருதுக்கு வசனகர்த்தா ஆரூர்தாசனும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கலைஞர் எழுதுகோல் விருது: திருச்சி மாவட்டத்தில் பிறந்த ஐ.சண்முகநாதன் (87), தினத்தந்தியில் உதவி ஆசிரியராகப் பொறுப்பேற்று இதுநாள் வரை பத்திரிகைத் துறையில் பணியாற்றி வருகிறார். பெரும் மக்களுக்கான இதழியலில் நீண்ட நெடிய பணி அனுபவம் என்பது, நிகழ்த்தற்கரிய சாதனையாகும்.



ஐ.சண்முக நாதன்



ஆரூர்தாஸ்

பத்திரிகையின் ஆசிரியர் பிரிவில் செய்தி ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றியவர். ஐ.சண்முகநாதன் தினத்தந்தி குழுமத்தால் வெளியிடப்பட்ட வரலாற்றுச் சுவடுகளில் அவரது பங்களிப்பு முக்கியமானது.

பெருவாரியான மக்கள் இதழியலில் மொழிப் பயன்பாட்டைத் தீர்மானித்தவர்களில் ஒருவராகச் செயல்பட்டார். நீண்ட நெடிய பத்திரிகைத் துறை அனுபவம் கொண்ட அவருக்கு கலைஞர் எழுதுகோல் விருது அளிக்கப்படுகிறது. இந்த விருது முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த தினமான வெள்ளிக்கிழமையன்று (ஜூன் 3) வழங்கப்பட உள்ளது. இந்த விருதானது ரூ.5 லட்சம் பரிசுத் தொகையுடன், பாராட்டுச் சான்றிதழ் அடங்கியது.

கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருது: தமிழ்த் திரைத்துறையில் சிறந்து விளங்கும் வாழ்நாள் சாதனையாளருக்கு, கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருது வழங்கப்பட உள்ளது. நிகழாண்டில், இந்த விருதுக்கு மிகச்சிறந்த வசனகர்த்தா ஆரூர்தாஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். நூற்றுக்கணக்கான திரைப்படங்களுக்கு வசனங்கள் எழுதியவர்.

திருவாரூர் மாவட்டத்தில் பிறந்த ஆரூர்தாஸ், முன்னணி நடிகர்கள், நடிகைகள் உள்ளிட்டோர் நடித்த ஆயிரம் திரைப்படங்களில் உரையாடலில் அழுத்தமான பங்கினை வகித்தவர்.

தனது ஊரான திருவாரூர் பெயரையும், பெயரிலுள்ள ஏசுதாஸில் உள்ள பிற்பாதியையும் இணைத்து ஆரூர்தாஸ் என வைத்துக் கொண்டார். 60 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்த் திரையுலகில் நெடிய பணிபுரிந்த அனுபவம் கொண்ட சாதனையாளர். இந்த விருதானது ரூ.10 லட்சம் அடங்கியது.

11 இடங்களில் வெயில் சதம்

சென்னை, ஜூன் 2: தமிழகத்தில் 11 இடங்களில் வியாழக்கிழமை 100 டிகிரி பாரன்ஹீட்டை தாண்டி வெப்பம் பதிவானது. அதிகபட்சமாக, சென்னை நுங்கம்பாக்கம், மீனம்பாக்கம், திருத்தணியில் தலா 104 டிகிரியும், கரூர் பரமத்தியில் 103 டிகிரியும், வேலூரில் 102 டிகிரியும், கடலூர், மதுரை நகரம், மதுரை விமானநிலையத்தில் தலா 101 டிகிரியும், நாமக்கல், தஞ்சாவூர், திருச்சி தலா 100 டிகிரியும், பரங்கிப்பேட்டையில் 99 டிகிரியும் பதிவானது. இதுதவிர, புதுச்சேரி, காரைக்காலில் தலா 100 டிகிரி வெப்பநிலை பதிவானது.

கத்திரி வெயில் நிறைவடைந்து 5 நாள்களை கடந்துள்ள நிலையில், வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதேநிலை வெள்ளிக்கிழமையும் தொடரும் என்று தெரிகிறது.

ஜூன் 23-இல் அதிமுக பொதுக்குழு

சென்னை, ஜூன் 2: அதிமுகவின் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் ஜூன் 23-இல் கூடும் என்று அக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வியாழக்கிழமை அறிவித்துள்ளனர்.

அதிமுகவின் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாசலபதி பேலஸ் மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும். கூட்டத்துக்கு தற்காலிக அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமை வகிக்கிறார்.

இரட்டைத் தலைமை இருப்பதால் பல்வேறு குழப்பங்கள் நிலவி வருகிறது. இதனால், அடிமட்ட தொண்டர்களும் பலர் அதிருப்தியாக இருந்து வருகின்றனர். இந்நிலையில் அதிமுகவுக்கு ஒற்றைத் தலைமை ஏற்படுத்த முடியுமா என்பது குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

மேலும், அதிமுகவுடன் கூட்டணியில் இருந்தாலும், பாஜக பிரதான எதிர்க்கட்சி போல செயல்படுகிறது. அதிமுகவைப் பின்னுக்குத் தள்ளப் பார்க்கிறது என்று முன்னாள் அமைச்சர் சி.பொன்னையன் குற்றம் சாட்டினார். இதே கருத்தில் அதிமுகவினர் பலர் உள்ளனர். பாஜகவுடனான கூட்டணி உறவு குறித்தும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது.

படிவம் எண். CAA 2

(நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவு 230(3) மற்றும் நிறுவனங்கள்
(சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புகள்) விதிகள் 2016 ன் விதி 6 மற்றும் 7 க்கிணங்க)
நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை

நிறுவன விண்ணப்பம் (CAA) எண். 38/2022

நிறுவனங்கள் சட்டம் 2013 விவகாரத்திலும்;

நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவு 230 முதல் 232 வரை - உடன் படிக்க - பிரிவு 52 மற்றும் இதர பொருத்தமான சட்ட பிரிவுகள் விவகாரத்திலும்;

ஸ்ரீலேகா பிஸினஸ் கன்சல்டன்ஸி பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் ஃபைனான்சியல் வென்சுர்ஸ் (சென்னை) பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் கேப்பிடல் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் ட்ரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் சிட்டி யூனியன் ஃபைனான்ஸ் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் LI ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் GI ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றை இணைத்தல் மற்றும் அவைகளின் பங்குதாரர்களிடையிலான ஒருங்கிணைத்தல் திட்ட விவகாரத்தில்

ஸ்ரீராம் ஃபைனான்சியல் வென்சுர்ஸ் (சென்னை) பிரைவேட் லிமிட்டெட்
நிறுவனங்கள் சட்டம் 1956 ன் கீழ் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனம்.
பதிவு அலுவலகம் -
ஸ்ரீராம் ஹவுஸ், எண். 4, பர்கிட் சாலை,
தி நகர், சென்னை-600017
தமிழ்நாடு., அதன் நிர்வாக இயக்குனர் திரு. D V ரவி என்பவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

....SFVPL

நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவு 230 முதல் 232 வரை - உடன் படிக்க - நிறுவனங்கள் (சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புகள்) விதிகள் 2016 ன் விதி 6 ன் கீழ் நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களுக்காக கூட்டம் நடத்தப்படுவதற்கான அறிவிப்பு

பெறுநர்,

ஸ்ரீராம் ஃபைனான்சியல் வென்சுர்ஸ் (சென்னை) பிரைவேட் லிமிட்டெட் (''நிறுவனம்'' அல்லது ''SFVPL'') ன் ஈட்டுறுதி பங்குதாரர்கள்

இதன் மேற்குறிப்பிட்ட நிறுவன விண்ணப்பத்தில் 2022 மே 11 ம் தேதியன்று மாண்பமை நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வால் (''NCLT'') பிறப்பிக்கப்பட்டு (''ஆணை'') அதில் வருகின்ற 2022 ம் வருடம் ஜூலை மாதம் 05 ம் தேதி செவ்வாய்கிழமையன்று காலை 11.00 மணிக்கு நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கான கூட்டத்தை நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் நடத்தி, அதில் ஸ்ரீலேகா பிஸினஸ் கன்சல்டன்ஸி பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் ஃபைனான்சியல் வென்சுர்ஸ் (சென்னை) பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் கேப்பிடல் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் ட்ரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் சிட்டி யூனியன் ஃபைனான்ஸ் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் LI ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் GI ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றை இணைத்தல் மற்றும் அவைகளின் பங்குதாரர்களிடையிலான ஒருங்கிணைத்தல் திட்ட விவகாரத்தை (''திட்டம்'') கலந்தாலோசித்து, தக்கதென கருதும் பட்சத்தில் அதனை மாற்றங்களுடனோ அல்லது மாற்றமின்றியோ அங்கீகரிக்க ஆணையிடப்பட்டுள்ளது என்பதை அறியவும்.

மேலும் மேற்சொன்ன ஆணையின் படியும் மற்றும் அதில் வழிகாட்டப்பட்டவாறும் நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களின் கூட்டமானது வருகின்ற 2022 ம் வருடம் ஜூலை மாதம் 05 ம் தேதி செவ்வாய்கிழமையன்று காலை 11.00 மணிக்கு நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என்பதையும்., அது சமயம் தாங்கள் அதில் கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் என்பதையும் அறியவும்.

மேலும் தாங்கள், நிறுவனத்தின் பதிவு அலுவலகமான ஸ்ரீராம் ஹவுஸ், எண். 4, பர்கிட் சாலை, தி நகர், சென்னை-600017 என்ற முகவரியில் 2022 ம் வருடம் ஜூலை மாதம் 05 ம் தேதி செவ்வாய் கிழமையன்று காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள மேற்சொன்ன கூட்டத்தில் கலந்து கொண்டு நேரடியாகவோ அல்லது பதிலாள் மூமாகவோ வாக்களிக்கலாம் என்பதையும் அறியவும்.

மேலும் கூட்டத்துக்கான அறிவிப்பு, பதிலாள் படிவம், வருகை சீட்டு மற்றும் திட்டத்தின் நகல்கள் மற்றும் விளக்கவுரை ஆகியன பின்னிணைப்புகளுடன் நிறுவனங்கள் சட்டம் பிரிவு 230(3) மற்றும் 102 - உடன் சட்டம் 2013 விதி 6 ன் படிக்க - நிறுவனங்கள் (சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புகள்) விதிகள் 2016 ன் கீழ் அனுப்பப்பட்டுள்ளன. அதனை நிறுவனத்தின் பதிவு அலுவலகமான ஸ்ரீராம் ஹவுஸ், எண். 4, பர்கிட் சாலை, தி நகர், சென்னை-600017 என்ற முகவரியில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியவும்.

மேலும் நிறுவனங்களுக்கான தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு திரு. R. நடராஜன், வழக்கறிஞர் அவர்களை மேற்சொன்ன கூட்டத்துக்கான (கூட்ட ஒத்தி வைப்பு அல்லது ஒத்தி வைப்புகள் உட்பட) தலைவராக பணியமர்த்தியுள்ளது., அவர் இல்லாத நிலையில் நிறுவனத்தின் ஒரு இயக்குனர் கூட்டத்துக்கான தலைவராக செயல்படுவார் என்பதையும் அறியவும்.

தலைவர் கூட்டத்தின் மீதான அவரது அறிக்கையை, கூட்டம் முடிவடைந்து மூன்று நாட்களுக்குள் மாண்பமை தீர்ப்பாயத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இதன் மேற்குறிப்பிட்ட திட்டமானது, மேற்குறிப்பிட்ட கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டால், அது தேவையான சட்டபூர்வ மற்றும் இதர அங்கீகரிப்புகளுக்கும், மாண்பமை தீர்ப்பாயத்தின் அனுமதிப்புக்கும் கட்டுப்பட்டது.

குறிப்பு - நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கு அறிவிப்புகள் மின்னஞ்சல் மூலம் 2022 ம் வருடம் ஜூன் மாதம் 02 ம் தேதியன்று அனுப்பப்பட்டுள்ளன.

ஒப்பம்/-
D.V. ரவி, நிர்வாக இயக்குனர்,
ஸ்ரீராம் ஃபைனான்சியல் வென்சுர்ஸ் (சென்னை) பிரைவேட் லிமிட்டெட்.,
2022 ம் வருடம் ஜூன் மாதம் 02 ம் தேதியன்று சென்னையில்
பதிவு அலுவலகம்:
ஸ்ரீராம் ஹவுஸ்,
எண். 4, பர்கிட் சாலை,
தி நகர், சென்னை-600017

Muthoot Microfin Limited | தங்க நகை ஏல அறிவிப்பு

**Regd. Office: 5th Floor, Muthoot Towers, M.G Road, Ernakulam - 682035.
CIN :U65190MH1992PLC066228, Ph:+91 484 4277500**

எமது நிறுவனத்தின் கீழ்க்கண்ட கிளைகளில் 31.12.2021 & Bullet Gold Loan-Scheme 1, Bullet Gold Loan-Scheme 2, Bullet Gold Loan-Scheme 3, Open Market due up to 31.03.2022 வரையிலான காலத்தில் அடமானம் வைக்கப்பட்டு, முடிக்கப் பெறாத நகைக் கடனுக்காக பதிவு தபால் ஒப்புதல் அட்டையுடன் ஏல அறிவிப்பைப் பெற்று இன்றைய தேதி வரை மீட்கப்படாத மற்றும் அவ்விதம் அனுப்பப்பட்ட அஞ்சலைப் பெறாத அடகு வைத்தவர்களின் நகைகள் 10.06.2022 அன்று காலை 10.00 மணியளவில்.

CHENNAI 1 MML: 1103170105151582, 1103170105151583, 1103170105151584, 1103170105014998.
CHENNAI 4 MML: 1103130105150525. **CHENNAI 5 MML:** 1103160105148713, 1103160105149067.
MINJUR MML: 1106170105002847, 1106170105005204, 1106170105002845, 1106170105002846, 1106170105025398, 1106170105141731, 1106170105002843, 1106170105002984.

ஆகிய கிளைகளில் அடகு வைத்த நகைகளை Auction will be conducted at respective branches. Please note if the auction does not get completed on the same day due to any reasons, the same will be conducted on 21.06.2022 at 10.00 am at Muthoot FinCorp Ltd., First Floor, Old No: 10, New No: 27, Choolaimedu High Road, Choolaimedu, Chennai - 600094. என்ற விலாசத்தில் உள்ள கம்பெனியின் அலுவலகக் கட்டடத்தில் பகிரங்கமாக ஏலம் நடைபெறும் என்று இந்த அறிவிப்பின் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது. (ஏலம் கேட்க விரும்புகிறவர்கள் தங்கள் முகவரி பத்திரம் (ID Proof) மற்றும் அடையாளப் பத்திரத்தைக் (Pancard) கொண்டு வருவதுடன் ஏலம் எடுப்பவர்கள் RTGS மூலம் ரொக்கத்தை பரிமாற்றம் செய்ய வேண்டும்.

முத்தூட் மைக்ரோஃபின் லிமிடெட்

Rane **ரானே பிரேக் லைனிங் லிமிடெட்**
CIN: L63011TN2004PLC054948
பதிவு அலுவலகம்: "மைத்ரி", எண்.132, கதீட்ரல் சாலை, சென்னை - 600 086. Tel.: 044 2811 2472 / 73
Website: www.ranegroup.com | E-mail: investorservices@ranegroup.com

பொது அறிவிப்பு - 17-வது வருடாந்திரப் பொதுக் கூட்டம்

இதன் மூலம் கொடுக்கப்படும் அறிவிப்பு என்னவென்றால், ரானே பிரேக் லைனிங் லிமிடெட் நிறுவனத்தின் உறுப்பினர்களின் **17-வது வருடாந்திரப் பொதுக் கூட்டம்** (AGM) **ஜூன் 28, 2022 செவ்வாய்க்கிழமை, பிற்பகல் 02.00 மணிக்கு** வீடியோ கான்பெரன்ஸ் / பிற ஆடியோ விஷுவல் மூலம் நடைபெறும். தொடரும் கோவிட்-19 தொற்றுநோயைக் கருத்தில் கொண்டு, கார்ப்பரேட் விவகார அமைச்சகம் ("MCA") மே 05, 2022 தேதியிட்ட அதன் சுற்றறிக்கையை இது தொடர்பான முந்தைய சுற்றறிக்கைகளுடன் படிக்க அனுமதித்துள்ளதுடன், (ஒட்டுமொத்தமாக "பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்" என குறிப்பிடப்படுகிறது) VC / OAVM மூலம் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தினை நடத்திட அனுமதியளித்துள்ளது. அதன்படி நிறுவனத்தின் 17வது வருடாந்திர பொதுக்குழு கூட்டமானது, VC/OAVM மூலம் கூட்டப்படும் மற்றும் வணிகமானது பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") விதிகளுக்கு இணங்க மின்னணு முறையில் வாக்களிப்பதன் மூலம் பரிவர்த்தனை செய்யப்படும். **கட்-ஆஃப் தேதி, அதாவது ஜூன் 21, 2022 செவ்வாய் அன்று,** உறுப்பினர்களின் பதிவேட்டிலோ அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டிலோ ஒரு நபர் பதிவு செய்யப்பட்டிருந்தால் மட்டுமே 'ரிமோட் மின்-வாக்களிப்பு' அல்லது வாக்களிப்பினை, வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் செலுத்துவதற்கு தகுதியுடையவர் ஆவார். வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் வாக்களிப்பது அல்லது வாக்களிக்கும் வசதிக்காக நிறுவனமானது மத்திய டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) நிறுவனத்தினை, மின்னணு வழிகளில் வாக்களிக்க வசதியாக, அதாவது ரிமோட் மின்-வாக்களிப்பு மற்றும் AGM தேதியில் வாக்களிப்பதற்கான சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

மே 13, 2022 தேதியிட்ட SEBI சுற்றறிக்கை மற்றும் சட்டத்தின் பிரிவு 108ன் விதிகள், நிறுவனங்களின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 மற்றும் SEBI LODR, நிதியாண்டு 2021-22க்கான வருடாந்திர அறிக்கை ஆகியவற்றுடன் படிக்கப்படும் பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க நிறுவனம் / பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் அல்லது டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் மின்னஞ்சல் முகவரி பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு 17வது வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் வாக்களிப்பதற்காக, மின்னணு முறையில் அனுப்பப்படுகிறது. மேலே உள்ள ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளமான www.ranegroup.com என்ற இணையதளத்திலும், BSE லிமிடெட் இணையதளமான www.bseindia.com, தேசிய பங்குச் சந்தை இந்தியா லிமிடெட் இணையதளம் www.nseindia.com மற்றும் CDSL இணையதளம் https://www.evotingindia.com மூலம் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால்:

(i) "ரிமோட் மின்-வாக்களிப்பு" காலம் **ஜூன் 25, 2022 சனிக்கிழமை அன்று (09:00 மணி IST) தொடங்கி ஜூன் 27, 2022 திங்கட்கிழமை (17:00 மணி IST) முடிவடைகிறது.** மேலே கூறப்பட்ட காலத்திற்கு பிறகு ரிமோட் மின்-வாக்களிப்பு அனுமதிக்கப்படாது என்பதை உறுப்பினர்கள் கவனிக்கவும்.

(ii) இந்த காலகட்டத்தில், வரம்புத் தேதி **ஜூன் 21, 2022 செவ்வாய்க்கிழமை அன்று** இருக்கும் அங்கத்தினர்கள் மற்றும் புதிய பங்குதாரர்கள் பிசிகல் வடிவம் அல்லது டிமடீரியல் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் CDSL மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.

(iii) தொலை மின்-வாக்களிப்பு மூலம் வாக்களித்த அங்கத்தினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் மறுபடியும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் நடைபெறும் வாக்களிப்பில் வாக்களிக்க இயலாது.

(iv) உறுப்பினர்கள் CDSL மின்னணு வாக்களிப்பு முறைக்கான இணைய இணைப்பு : https://www.evotingindia.com-ல் shareholders/members loginஐ இயக்கலாம். AGMல் இணைவதற்கும் அதே லிங்க் செல்லுபடியாகும். ரிமோட் மின்-வாக்களிப்பு செயல்முறை, AGMல் இணைவது மற்றும் AGMஇன் போது மின்-வாக்குப்பதிவு பற்றிய விரிவான வழிமுறைகள் AGM அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(v) டெபோசிடோரிஸ் மின்னஞ்சல் முகவரியை பதிவுசெய்யாத உறுப்பினர்கள் மின் வாக்களிப்பதற்கான உள்நுழைவு விவரங்களை பெற பொதுக் கூட்ட அறிவிப்பின் படி நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி investorservices@ranegroup.com அல்லது RTA மின்னஞ்சல் முகவரி srirams@integratedindia.in அனுப்புமாறு கோரப்படுகிறது.

(vi) திரு. பாலு ஸ்ரீதர், பயிற்சி நிறுவன செயலாளர் (ICSI உறுப்பினர் எண். FCS 5869), தொழில் கூட்டாளி, M/s. A.K. ஜெயின் & அசோசியேட்ஸ், நிறுவன செயலாளர்கள், 'ரிமோட் மின்-வாக்களிப்பு' செயல்முறை மற்றும் AGMல் வாக்களிப்பதை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்பவராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(vii) உறுப்பினர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளில் நேரடியாக ஈவுத்தொகைகளைப் பெறுவதற்கான ஆணையை மின்னணு தீர்வு சேவை (ECS) மூலம் அந்தந்த வைப்புத்தொகை பங்கேற்பாளர்கள் (டிமேட் வைத்திருப்பவர்களுக்கு) / RTA அல்லது நிறுவனம் (பிசிகல் ஹோல்டிங்) வைத்திருப்பவர்கள் வரம்பு தேதி ஜூன் 21, 2022 அல்லது அதற்கு முன் புதுப்பிக்கலாம். வருமான வரிச் சட்டம், 1961ன்படி, பொருந்தக்கூடிய இடங்களில் டி.டி.எஸ் கழிக்கப்படும்.

வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது தொலைநிலை மின்-வாக்களிப்பு / மின்-வாக்களிப்பு தொடர்பான ஏதேனும் வினவல் / தெளிவுபடுத்துதல் அல்லது சிக்கல்களுக்கு www.evotingindia.com என்ற இணையதளத்தில் Help பகுதியின் கீழ் அடிக்கடிக் கேட்கப்படும் கேள்விகள் (FAQ's) மற்றும் மின்-வாக்களிப்பு கையேடு காணலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சலுக்கு எழுதவும் அல்லது திரு. ராகேஷ் தல்வி (மூத்த மேலாளர்)-யை 1800 22 55 33 என்ற கட்டணமில்லா எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

(இயக்குனர் குழு உத்தரவுப்படி)
ரானே பிரேக் லைனிங் லிமிடெடுக்காக
வெங்கட்ராமன்
நிறுவனத்தின் செயலாளர்

சென்னை
ஜூன் 02, 2022

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!

SHRIRAM
A WINNING RELATIONSHIP

படிவம் எண். CAA 2

(நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவு 230(3) மற்றும் நிறுவனங்கள்
(சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புகள்) விதிகள் 2016 ன் விதி 6 மற்றும் 7 க்கிணங்க)
நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை

நிறுவன விண்ணப்பம் (CAA) எண். 7/2022

நிறுவனங்கள் சட்டம் 2013 விவகாரத்திலும்;

நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவு 230 முதல் 232 வரை - உடன் படிக்க - பிரிவு 52 மற்றும் இதர பொருத்தமான சட்ட பிரிவுகள் விவகாரத்திலும்;

ஸ்ரீலேகா பிஸினஸ் கன்சல்டன்ஸி பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் ஃபைனான்சியல் வென்சுர்ஸ் (சென்னை) பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் கேப்பிடல் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் ட்ரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் சிட்டி யூனியன் ஃபைனான்ஸ் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் LI ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் GI ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றை இணைத்தல் மற்றும் அவைகளின் பங்குதாரர்களிடையிலான ஒருங்கிணைத்தல் திட்ட விவகாரத்தில்

ஸ்ரீராம் ட்ரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்
நிறுவனங்கள் சட்டம் 1956 ன் கீழ் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனம்.
பதிவு அலுவலகம் -
ஸ்ரீ டவர்ஸ், ப்ளாட் எண். 14A, சௌத் ஃபேஸ்,
தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-600032., அதன் நிறுவன செயலர் திரு. விவேக் அச்வால் என்பவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

... பரிமாற்றப்படும் நிறுவனம் 2 / STFC

நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவு 230 முதல் 232 வரை - உடன் படிக்க - நிறுவனங்கள் (சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புகள்) விதிகள் 2016 ன் விதி 6 ன் கீழ் நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களுக்காக கூட்டம் நடத்தப்படுவதற்கான அறிவிப்பு

பெறுனர்,

ஸ்ரீராம் ட்ரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்., (''பரிமாற்றப்படும் நிறுவனம் 2'' அல்லது ''நிறுவனம்'' அல்லது ''STFC'') ன் ஈட்டுறுதி பங்குதாரர்கள்

இதன் மேற்குறிப்பிட்ட நிறுவன விண்ணப்பத்தில் 2022 மே 11 ம் தேதியன்று மாண்பமை நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வால் (''NCLT'') பிறப்பிக்கப்பட்டு (''ஆணை'') அதில் வருகின்ற 2022 ம் வருடம் ஜூலை மாதம் 04 ம் தேதி திங்கட்கிழமையன்று காலை 10.00 மணிக்கு நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கான கூட்டத்தை நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் நடத்தி, அதில் ஸ்ரீலேகா பிஸினஸ் கன்சல்டன்ஸி பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் ஃபைனான்சியல் வென்சுர்ஸ் (சென்னை) பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் கேப்பிடல் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் ட்ரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் சிட்டி யூனியன் ஃபைனான்ஸ் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் LI ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் GI ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீராம் இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றை இணைத்தல் மற்றும் அவைகளின் பங்குதாரர்களிடையிலான ஒருங்கிணைத்தல் திட்ட விவகாரத்தை (''திட்டம்'') கலந்தாலோசித்து, தக்கதென கருதும் பட்சத்தில் அதனை மாற்றங்களுடனோ அல்லது மாற்றமின்றியோ அங்கீகரிக்க ஆணையிடப்பட்டுள்ளது என்பதை அறியவும்.

மேலும் மேற்சொன்ன ஆணையின் படியும் மற்றும் அதில் வழிகாட்டப்பட்டவாறும் நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களின் கூட்டமானது வருகின்ற 2022 ம் வருடம் ஜூலை மாதம் 04 ம் தேதி திங்கட்கிழமையன்று காலை 10.00 மணிக்கு காணொளி காட்சி (''VC'') மூலம் நடைபெறவுள்ளது என்பதையும்., அது சமயம் தாங்கள் அதில் கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் என்பதையும் அறியவும்.

நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவு 230(4) (''சட்டம்'') - உடன் படிக்க - நிறுவனங்கள் (சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புகள்) விதிகள் 2016 ன் விதி 6(3)(XI) ; மேற்சொன்ன சட்டப்பிரிவு 108 - உடன் படிக்க - நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014 ன் விதி 20; (சட்டபூர்வ மாற்றங்கள் அல்லது மறு சட்டமாக்கல் போன்றவை உட்பட) மற்றும் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (கடமைகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்தல்) ஒழுங்காற்று முறைகள் 2015 ன் ஒழுங்காற்று முறை 44 மற்றும் இதர பொருத்தமான பிரிவுகள் ; இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் வழங்கப்பட்ட 2021 நவம்பர் 23 தேதிய பெருஞ்சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/DIL1/CIR/P/2021/0000000665; 2017 மார்ச் 10 தேதிய சுற்றறிக்கை எண். CFD/DL3/CIR/2017/21 ஆகியவற்றுக்கிணங்க, நிறுவனமானது ஈட்டுறுதி பங்குதாரர்கள் திட்டத்தை கலந்தாலோசித்து, அறிவிப்பில் குறிப்பிட்டவாறு தீர்மானம் மூலம் அங்கீகரிக்க மின்னணு வாக்களிப்பு முறையை வழங்கியுள்ளது. கூடுதலாக, நிறுவனமானது கூட்டத்திலேயே மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்கும் வசதியை வழங்கியுள்ளது. அதனால் ஈட்டுறுதி பங்குதாரர்கள் உத்தேசிக்கப்பட்ட திட்டத்தின் மீதான தங்களது வாக்குகளை கூட்டத்துக்கு முன்பே தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலமும் மற்றும் கூட்டம் நடைபெறும் சமயத்தில் மின்னணு வாக்களிப்பு மூலமும் முறையே செலுத்தப்பட வேண்டும். நிறுவனமானது சென்ட்ரல் டெபாசிடரி சர்வீசஸ் (இந்தியா) லிமிட்டெட் - யை காணொளி காட்சி வசதி, கூட்டத்துக்கு முந்தைய தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதி மற்றும் கூட்டம் நடைபெறும் சமயத்திலான மின்னணு வாக்களிப்பு வசதி ஆகியவற்றை வழங்க பணித்துள்ளது என்பதை அறியவும்.

மேலும் கூட்டத்துக்கான அறிவிப்பு, திட்டத்தின் நகல்கள் மற்றும் விளக்கவுரை ஆகியன பின்னிணைப்புகளுடன் நிறுவனங்கள் சட்டம் பிரிவு 230(3) மற்றும் 102 - உடன் சட்டம் 2013 விதி 6 ன் படிக்க - நிறுவனங்கள் (சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புகள்) விதிகள் 2016 ன் கீழ் அனுப்பப்பட்டுள்ளன. அதனை நிறுவனத்தின் பதிவு அலுவலகமான ஸ்ரீ டவர்ஸ், ப்ளாட் எண். 14A, சௌத் ஃபேஸ், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-600032 என்ற முகவரியில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியவும். பெருநிறுவனங்களுக்கான விவகாரத்துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கைக்கு கட்டுப்பட்டு, காணொளி காட்சி மூலம் கூட்டம் நடைபெறுவதால், ஈட்டுறுதி பங்குதாரர்களால் பதிலாள் பணியமர்த்தப்படும் வசதிக்கான நியமன படிவம் இக்கூட்டத்துக்கு கிடையாது., அதனால் பதிலாள் படிவம், வருகை சீட்டு ஆகியன இவ்வறிவிப்புடன் இணைக்கப்படவில்லை என்பதையும் அறியவும்.

மேலும் நிறுவனங்களுக்கான தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு மாண்பமை திரு. V பார்த்திபன், மேனாள் நீதிபதி, சென்னை உயர் நீதிமன்றம் அவர்களை மேற்சொன்ன கூட்டத்துக்கான (அதை தொடர்ந்த கூட்ட ஒத்தி வைப்பு அல்லது ஒத்தி வைப்புகள் உட்பட) தலைவராக பணியமர்த்தியுள்ளது., அவர் இல்லாத நிலையில் நிறுவனத்தின் ஒரு இயக்குனர் கூட்டத்துக்கான தலைவராக செயல்படுவார் என்பதையும் அறியவும்.

ஈட்டுறுதி பங்குதாரர்களின் வாக்களிப்பு தகுதியானது, நிறுவனத்தின் 2022 ஜூன் 27 (முடிவுறு தேதி) ம் தேதியின் அடிப்படையிலேயே கணக்கிடப்படும். மேற்சொன்ன ஈட்டுறுதி பங்குதாரர்களால் அளிக்கப்பட்ட வாக்குகள், முடிவுறு தேதியை கருத்தில் கொண்டே கணக்கிலெடுத்துக்கொள்ளப்படும். தொலைதூர மின்னணு வாக்களிப்பு 2022 ஜூலை 01 வெள்ளிக்கிழமை காலை 09.00 மணி (இந்திய நேரப்படி) க்கு தொடங்கி 2022 ஜூலை 03 ஞாயிற்றுக்கிழமை மாலை 05.00 மணி (இந்திய நேரப்படி) முடிவடைகிறது. முடிவுறு தேதியன்று உறுப்பினரல்லாத நபர்கள் இந்த அறிவிப்பை ஒரு தகவலுக்கானதாகவே கருதப்பட வேண்டும்.

தலைவர் கூட்டத்தின் மீதான அவரது அறிக்கையை, கூட்டம் முடிவடைந்து மூன்று நாட்களுக்குள் மாண்பமை தீர்ப்பாயத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இதன் மேற்குறிப்பிட்ட திட்டமானது, மேற்குறிப்பிட்ட கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டால், அது தேவையான சட்டபூர்வ மற்றும் இதர அங்கீகரிப்புகளுக்கும், மாண்பமை தீர்ப்பாயத்தின் அனுமதிப்புக்கும் கட்டுப்பட்டது.

குறிப்பு - தேசிய நிறுவனங்களுக்கான சட்ட தீர்ப்பாயத்தின் ஆணையால் அனுமதிக்கப்பட்டவாறு, நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களால் நிறுவனத்தில் / வைப்பகங்களில் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிகளுக்கு, மின்னஞ்சல் மூலம் 2022 ம் வருடம் மே மாதம் 31 ம் தேதியன்று இவ்வறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன., மேலும் நிறுவனத்தில் / இண்டக்ரேடட் ரிஜிஸ்ட்ரி மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிட்டெட் / வைப்பகங்களில் தங்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கு கூட்டத்துக்கான காகித வடிவிலான அறிவிப்பு தூதஞ்சல் மூலம் 2022 ஜூன் மாதம் 1 ம் தேதியன்று அனுப்பப்பட்டுள்ளன.

ஒப்பம்/-
உமேஷ் ரிவாங்கர், துணை தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
ஸ்ரீராம் ட்ரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்
2022 ம் வருடம் ஜூன் மாதம் 02 ம் தேதி வியாழக்கிழமையன்று.
பதிவு அலுவலகம்: ஸ்ரீ டவர்ஸ், ப்ளாட் எண். 14A, சௌத் ஃபேஸ்,
தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-600032.